

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை, பெரியகாடு கடற்கரை மைதானத்தில் இன்று (02.09.2016) தொடங்கி வைத்தார்.

செ.வெ.எண்: 593/2016 நாள்: 02.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டு போட்டிகளை இன்று (02.09.2016) தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக நடத்தப்படும் மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டுப்போட்டிகளான கால்பந்து, வாலிபால் மற்றும் கபாடி போட்டிகளை பெரியகாடு கடற்கரை மைதானத்தில் இன்று (02.09.2016) தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டுப்போட்டிகள் நமது மாவட்டத்தில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் 2016-17-ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டுப்போட்டிகள் இன்று ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக வாலிபால், கால்பந்து மற்றும் கபாடி போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் பரிசு பெறும் 26 நபர்களுக்கு தலா ரூ.500/-ம், இரண்டாம் பரிசு பெறும் 26 நபர்களுக்கு தலா ரூ.350/-ம், மூன்றாம் பரிசு பெறும் 26 நபர்களுக்கு தலா ரூ.200/-ம் என மொத்தம் 78 வீர, வீராங்கனைகளுக்கு ரொக்கபரிசும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது. மேலும் இவர்களின் திறமைகளை ஊக்கப்படுத்தும்விதமாக, அனைத்துப் போட்டிகளிலும் முதல் பரிசு பெறும் வீர, வீராங்கனைகளுக்கு அரசு சார்பில், மாநில அளவிலான நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே வீர, வீராங்கனைகள் தங்களது முழு திறமையை வெளிப்படுத்தி, மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு, வெற்றி பெற்று, நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் மற்றும் விளையாட்டு நல அலுவலர் திரு. சேவியர் ஜோதிசற்குணம், பெரியகாடு பங்கு தந்தை மரிய செல்வன் மற்றும் வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டுப்போட்டிகளில் கால்பந்து போட்டியினை பெரியகாடு கடற்கரை மைதானத்தில் இன்று (02.09.2016) துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அளவிலான கடற்கரை விளையாட்டுப்போட்டிகளில் கபடி போட்டியினை பெரியகாடு கடற்கரை மைதானத்தில் இன்று (02.09.2016) துவக்கி வைத்தார்.